திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : 1½ ஆண்டுகளுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தபொழுது மக்களுக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி தந்தார்கள். இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது உடனடியாக இந்த நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்து, இந்தச் சிறிய பாலத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்பொழுது தான் தொகுதிக்குப் போகாமல் ஒளிந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காப்பாற்றி விட்டார்களே! இன்னும் என்ன ?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : துணைத்தலைவரவர்களே, எனக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கும் உதவி செய்கின்ற வகையில் அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுள்ளதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, வேலையை உடனடியாகத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலைத் தொடங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : இப்படிப் பல திட்டங்கள் நிறைவேற்றப் படாமல் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிக் குப் போகமுடியாமல் இருந்தால், அத்தகையத் திட்டங்களை எல்லாம் அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லோரும் தொகுதிக்குப் போகவேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

குடதலையாற்றின் குறுக்கே பாலம்

* 293. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டருகில் குடதலை யாற்றின் மீது அமைக்கப்படும் மேல்நிலைப் பாலத்திட்டம் தற்போது எந்நிலை யிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, இந்தக் குடதலை ஆற்றின் மீது—அந்த அணை கட்டப்பட்ட நேரத்திலேயே—இந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பழைய அரசு பாலம் கட்டத் தவறி விட்டது. ஆகவே, இந்த அரசு அதைப் பரிசீலித்து, வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது முதலிடம் கொடுத்து, பாலம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதன் மதிப்பீடு 16 லட்சம் ரூபாய் ஆகிறது. இப்போதைய நிதிநிலை இடம் தராததால், ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முன் உரிமை வழங்கப்படும்.

வடார்க்காட்டிலுள்ள காட்டுப் பகுதிகளில் சாலைகள்

* 294. வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயத்திற்கும்—போளூருக்குமிடையிலும், காவலூர்—சிங்காரப்பேட்டைக்கிடையிலும் நெடுஞ்சாலைகள் போடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, it is now felt that in order to bring about effective administration in the locality and also to provide basic amenities to the people living in that area, there should be roads and it has been the demand of the people for so many years and still it has not been favourably considered. May I know whether this work will be taken up at least in the next financial year? I thought it would be answered by the Public Works Minister and felt that the Public Works Minister was concerned about it. I do not know how it has been shifted to the Electricity Minister. I expect either the Public Works Minister or any other Minister concerned to take up the matter.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவரவர்களே, இந்தச் சாலை கிட்டத்தட்ட 37 மைல் தொலைவு உள்ளது. சிறிய அளவிலே உள்ள வேலைகளைத் தான் காட்டு இலாகா எடுத்துக்கொள்ளலாம். மேலும் இதற்கு 20 லட்சம்